1968 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ), அண்டு (இ) பிரான்ஸ் நாட்டுச் சட்டமன்றத்தின் உறுப்பினர் திரு. எம். க்ளேவியன் அவர்கள் தலைமையில் வந்துள்ள நான்கு பிரெஞ்சு மீனவர்கள் குழு ஒன்று கருவிகளுடன் பொருந்திய இரு டோரிஸ் படகுகளைத் தமிழ்நாட்டுக் கடற்கரையில் கட்புல விளக்கத்திற்காக (Demonstratior) தங்கள் சொந்தச் செலவில் கொண்டு வந்தது. இந்தப் படகுகள் 8 மீட்டர் நீளம் உள்ளவை. ஒரு படகிற்கான செலவு ஏறத்தாழ ரூ. 16,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மீன்கள் நீரில் எந்த இடத்தில் உள்ளன என்பதைக் காட்டக்கூடிய மீன் கருவி அதில் பொருத்தப்பட்டுள்ளது. அவற்றில் 4 பரித்திறன் கொண்ட பொறி உள்ளது. கரையிலிருந்து 5 முதல் 30 மைல் வரையிலும்சென்று 270 அடிவரை ஆழமுள்ள இடங்களில் மீன் பிடிக்க அவை உதவும். வீசுவலை போட்டு மீன் பிடிக்க அவை உதவுகின்றன. இப் படகுகளை விட்டு வைக்க துறைமுக வசதிகள் தேவையில்லை. இவற்றைக் கரையில் கட்டி வைக்க இயலும். பிரெஞ்சு நாட்டுக் குழுவின் உதவியுடன் முன்னோடி முறையில் மீன்பிடி வேலைகள் 1968-ம் வருடம் பிப்ரவரி மாதம் 1-ம் தேதி முதல் துவக்கப்பட்டன. மீனளத்துறை சோதனைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கென இந்த இரண்டு படகுகளையும் விட்டு விட்டு பிரெஞ்சு குழு 1968-ம் வருடம் மார்ச் மாதம் 15-ம் தேதியன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றது. முதற்கண் மூன்று திங்கள்கட்கு ரூ. 6,301 செலவில் இந்த இரண்டு டோரிஸ் படகுகளின் உதவியுடன் முன்னோடி முறையில் மீன்பிடி வேலைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இந்தப் படகுகள் எந்தெந்தக் கடல் பகுதிகளில் மீன் பிடிக்கப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சென்னையை அடுத்துள்ள கடற்கரையோரப் பகுதிகளில்தான் மீன்பிடித்தொழிலுக்காகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

கடற்பாசி உரம்.

***132 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு கடற்பாசியை உரமாக உபயோகப்படுத்துவதற்கான ஆராய்ச்சி செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) அண்டு (இ) 1954-55-ம் ஆண்டில் ஆடுதுறை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்திய சோதனைகளின் விளைவாக, கடற்பாசி உரம் வழங்கப்பட்ட நிலங்களில் கிட்டியுள்ள விளைச்சல் மிக்க குறைவானதே என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அதை மேலும் நல்ல முறையில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது உண்மையா ? இல்லையென்று சொன்னால் இனிமேலாவது அப்படி ஆராய்ச்சி செய்வதற்கான உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கடற்பாசியைச் சுத்த நீரில் கழுவி உரம் தயாரிப்பதால் ஓரளவு நன்மைதான் ஏற்படுகிறது. கடல் நீரிலிருந்து எடுக்கப்பட்ட பாசியைச் சுத்த நீரில் கழுவாமல் அப்படி உபயோகித்தால் போதுமான பலன் ஏற்படவில்லை. குறுவை, தாளடி ஆகிய இரண்டு சாகுபடிகளில் அதைப் பயன்படுத்திப் பார்த்ததில் எதிர்பார்த்த பலன் கிடைக்காத காரணத்தால் அது கைவிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா நேரம் முடிவுற்ற போதிலும் அவையின் அனுமதியோடு மேலும் சிறிது நேரம் எடுத்துக் கொள்கிறேன். மு.ப. 10-00

திரு. கே. விநயகம் : கடல் பாசியை நிலத்திற்குத் தகுந்தாற்போல் உரமாக மாற்றமுடியவில்லையென்றாலும் முன்பொரு முறை முதல் அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது கடல் பாசியைக் கொண்டு அல்வா செய்து விற்று பணம் எடுக்க முடியும் என்று சொன்னதாக நினைவு. அப்போது நானும், நீங்களும் கூட இருந்தீர்கள். அந்த முயற்சியை இப்போது எடுத்துக்கொள்ள முடியுமா, இது பயன்படவில்லையென்றால்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது நிலம் பற்றியது. அங்கத்தினர் அவர்களுக்கு அல்வா செய்து சாப்பிட விருப்பம் இருந்தால் வீட்டில் முயற்சி செய்து பார்க்கலாம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : விவசாயத்திற்கு ஃபிஷ் மீல், மீன் உரம் கிடைப்பது மிகவும் கடினமாயிருக்கிறது. அதை விவசாயிகளுக்கு நல்ல முறையில் நிரம்பக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : செய்யப்பட்டுத்தான் வருகிறது.

திரு. மு. ச. சிவசாமி : ப்ரேஸீலியா என்ற கடல்பாசியிலிருந்து அகரகர் என்ற பொருளிலிருந்து அல்வா தயார் செய்யமுடியுமென்பதை தமிழக அரசு அறிந்து தூத்துக்குடியில் அதற்கான ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருப்பது தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஜெல்லிதான் தயாரிக்கப்படுகிறது.

Publications Officer

*133 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Harijan Welfare and information be pleased to state—

(*a*) whether the post of Publications Officer has been abolished; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : ஜில்லாக்களில் மக்களுக்கு அரசாங்கச் சாதனைகளை விளம்பரம் செய்வது தேவையில்லை என்ற காரணத்தால் இந்த அதிகாரி நிறுத்தப்பட்டாரா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கனவே வெளியீட்டு அலுவலராக இருந்த ஒருவர் 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 8-ம் தேதி 55 வயது பூர்த்தியானதால் மேற்படி பதவியிலிருந்து அவர் ஒய்வு பெற்றார். இப்போது அரசாங்க வெளியீடுகள் ஒன்றும் பிரசுரிக்காத காரணத்தினால் அந்தப் பதவி காலியாக வைக்கப்பட்டிருக்கிறதே தவிர அதை நிரந்தரமாக எடுத்து விடவில்லை.

அனந்தபுரத்தில் பத்திரப்பதிவாளர் அலுவலகம்.

*134 **வினா.—திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டத்தில் உள்ள அனந்தபுரம் என்ற ஊரில் ஒரு பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.